ஓம் சரவணஜோதியே நமோ நம

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

28.11.2024

1. ஞானக்கடலாய் அரங்கன் யான்
ஞானிகளை கலியினில் படைக்க
தானதரும வழிமுறை காட்டி
தவபலமாக அருளி நிற்க

2. நிற்கவே என் மக்கள் வளமுற
நிலவுலகினில் ஞானம் பெற
அற்புதமாய் குரோதி தேள் திங்கள்
அறிவிப்பேன் இரண்டாம் குருவார அருளாசி

3. அருளாசிதனை அரங்கனும் உரைப்பேன்
அகிலமதில் ஓங்கார ஞானமதை
வரமாக மக்களெல்லாம் அடைய
வணங்கி ஓங்காரக்குடில் நோக்கி

4. குடில் நோக்கி வருதல் வேணும்
குருவரங்கன் என்னை சோதிவடிவில்
நாடியே உணர்ந்து வணங்கியே
நாட்டிடுவேன் மக்கள் சரணடைய

5. சரணடைய ஞானபலம் தனை
சற்குருவாய் யானே அருள்வேன்
சரணடைவு சன்மார்க்க வழி
சாற்றிடுவேன் கண்ட மக்களுக்கு

6. மக்களுக்கு கட்டங்கள் நீக்கி
மரண பயம் போக்கி இனிதே
ஆக்கமுடன் தெளிவு திடமுடன்
ஆக்கை நலம் ஆரோக்கியம் ஆயுள் பலம்

7. பலமுடன் அவரவர் பிறவிப்பயனை
பழுதின்றி அடைய அருள்வேன்
சலனமும் மனமாயையும் போக்கி
சர்வமுமாய் மனஒடுக்கம் பாதுகாப்பு

8. காப்பான நெறிதனை ஊட்டி
கட்டாயம் வரும் மக்களை
எப்போதும் காத்து அருள்வேன்
எல்லா வகையும் தேறிவர

9. தேறிவர கருமவினை வெல்ல
தேடிவந்து அரங்கன் என் வழி
அறிவுத்தெளிவு ஆன்மபலம் பெற
அன்னதானம் தனில் பொருளுதவி

10. பொருளுதவி அளவிலா செய்து
புண்ணிய பலம்தனை பெற்றிட
ஆறுமுகப் பெருமான் காட்சி
அரங்கன் என் ஆசிபட அடைந்து

11. அடைந்துமே உலகோர் தானும்
அறிவிப்பேன் ஞானிகள் ஆவர்
தடையின்றி உலகையே மாற்றுவர்
தவராஜன் அருளிய குருவார அருளாசி முற்றே.

—சுபம்—

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி